★ பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஆவணி 14 நம்மான்: 25 இதழ்: 200
யாழ்ப்பாணம் புதன்கிழமை 30-8-78

# செத்தல்மிளகாயின்விலையை ரூ.12.50ஆக நிர்ணயிக்கவும்

## கூட்டுறவு அமைச்சருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)
செத்தல்மிளகாயின் உற்பத்தியாளர் விலையை 12 ரூபா 50 சதமாக நிர்ணயிக்குமாறு இலங்கைக் கூட்டுறவுச் சந்தைப்படுத்தும் திணைக்கள யாழ். கிளை அதிபர் திரு. என். ரீ. சிவஞானம் கூட்டுறவு அமைச்சின் செயலாளரைக் கோரியுள்ளார்.

இது தொடர்பாக திரு. சிவஞானம் கூட்டுறவு அமைச்சின் செயலாளருக்குக் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்

(6-ம் பக்கம் பார்க்க)

## அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முடிவு தொடர்பாக

# சட்டமா அதிபர் ஆலோசனைகளை

# சிறிமா உதாசீனம் செய்தார்

## பீலிக்ஸ், 3 நீதியரசர்களின் முறையற்ற செயல்குறித்தும்

### ஜனாதிபதி கமிஷன்முன் பிரஸ்தாபம்

(கொழும்பு)
பத்திரிகை மன்றச் சட்டமூலம் மீதான அரசியலமைப்பு நீதிமன்ற உறுப்பினர்களின் முடிவுகுறித்து அப்போதைய சட்டமா அதிபர் திரு. விக்டர் தென்னக்கோன் வழங்கியிருந்த ஆலோசனைகளை முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா உதாசினம் செய்ததுடன் அந்த ஆலோசனைகளையும் வெளியிடாது வைத்திருந்தார் என்று ஜனாதிபதி கமிஷன் முன்னிலையில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

திரு. விக்டர் தென்னக்கோன் திருமதி பண்டாரநாயக்காவுக்கு எழுதிய கடிதமும் கமிஷன் முன் சமர்ப்பிக்கப்பட்டு அரசதரப்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஏ. சி. டி- சொய்சாவினால் வாசிக்கப்பட்டது,

கடந்த ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற ஊழல் மோசடி, அதிகாரதுஷ்பிரயோகம் பற்றி விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சிரேஷ்ட வழக்கறிஞர் மேலும் கூறியதாவது:

பத்திரிகை மன்றச் சட்ட மூலம் மீதான தீர்ப்பை 14 நாட்களுக்குள் தேசியஅரசுப் பேரவைக்கு வழங்கமுடியாது என்ற அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முடிவு சரியானதே என்று திரு. விக்டர் தென்னக்கோன் திருமதி பண்டாரநாயக்காவுக்கு எழுதிய ஆலோசனைக்கடிதத்தில் தெரிவித்திருந்தார். திருமதி பண்டாரநாயக்காவின் கோரிக்கையின் பேரிலேயே திரு. தென்னக்கோன் அந்த ஆலோசனைக் கடிதத்தை எழுதினார். ஆனால் அந்த ஆலோசனைகள் தமக்கு ஆதரவாக இல்லாமையினாலும் தமக்கு எதிராக இருந்தமையினாலுமே திருமதி பண்டாரநாயக்கா அக் கடிதத்தை உதாசினம்செய்தார்.

கமிஷன் தலைவர் திரு. ஜே. ஜீ. டி. வீரரத்ன ஒரு கட்டத்தில், கடந்த ஆட்சியினர் நீதிச் சேவையைத் தாம் நினைத்தபடி எவ்வாறு ஆட்டிப்படைத்தனர் என்று இப்போதுதான் தெரிகிறது என்றார்.

### உயர் நீதிமன்றப் பதிவாளர் சாட்சியம்

கமிஷன் முன் சாட்சியமளித்த உயர் நீதிமன்றப் பதிவாளர் திரு. ஹேரத் கூறியதாவது;

முன்னாள் நீதியமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவும் மற்றும் சில நீதிபதிகளும் முறையற்ற வழிகளில் குறிப்பிட்ட வழக்குகளின் நீதிமன்றப் பதிவேடுகளைப் பார்வையிட்டனர்.

### சிறிமாவின் அந்தரங்கச் செயலாளர் பதிவேடு...

முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் அந்தரங்கச் செயலாளர் திரு.

(6-ம் பக்கம் பார்க்க)

## 2 சுதந்திரக்கட்சி எம்.பி.க்கள் அரசில் சேருவர்?

(கொழும்பு)
சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த இரண்டு எம். பி.க்கள் விரைவில் அரசாங்கக் கட்சியில் சேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்தமாதம் 7ம் திகதி புதிய அரசியல் அமைப்புத் திட்டம் அமுல்செய்யப்படுவதற்கு முன்னர் இவர்கள் சுதந்திரக்கட்சியிலிருந்து விலகி அரசாங்கக்கட்சியில் சேரக்கூடுமென அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. (ம-இ)

## மிளகாய் - வெங்காய விலை நிர்ணயம்:

[யாழ்ப்பாணம்]
செத்தல் மிளகாய் வெங்காயம் ஆகியவற்றின் விலையை நிர்ணயிப்பதற்காக யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் இன்று காலை மாநாடு ஒன்று நடைபெறவிருக்கிறது.

உணவு கூட்டுறவு பிரதி அமைச்சர் திரு. அமரசிறி இம் மாநாட்டைக் கூட்டியுள்ளார்.

### இன்று மகாநாடு

இம் மாநாட்டில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், வடபகுதி தேசியஅரசுப்பேரவை உறுப்பினர்கள் விவசாயகழக பிரதிநிதிகள், இலாகா தலைவர்கள் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (க-இ)

## ஜே.ஆர். கூறினும் தனிநாட்டு கொள்கையை எதிர்ப்பேன்

### சன்சோனி கமிஷன்முன் யாழ்.தேரோ

(கொழும்பு)
''ஜனாதிபதி திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தன கூறினால்கூட நான் இந்தநாட்டைப் பிரித்து தனிநாடு அமைக்கும் கொள்கைக்கு ஆதரவு அளிக்கமாட்டேன்.

காலஞ்சென்ற திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் எனக்கு என்றுமே நல்ல மதிப்புண்டு. அந்த மதிப்பின் காரணமாகவே அவர் இறந்தபோது வீரசிங்கம் மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினேன்.''

இவ்வாறு யாழ். நாகவிகாரைப் பிரதம குரு வண. கடவத்துவ நந்தாராம தேரோ

[6-ம் பக்கம் பார்க்க]

## தீண்டாமையை ஒழிப்பதற்கு எதிரான அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்

### தீண்டாமைஒழிப்பு மகாநாட்டில்'அமிர்'

(யாழ்ப்பாணம்)
தீண்டாமையை ஒழிப்பதற்கு தடையாக இருக்கும் அரசாங்க அதிகாரிகள் மீது தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்குமாறு யாழ் அரசாங்க அதிபரையும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்களையும் எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் கேட்டுக்கொண்டார்.

யாழ் அரசாங்க செயலகத்தில் யாழ் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணன்டோ தலைமையில் தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடைபெற்றது.

திரு. அமிர்தலிங்கம் அம் மகாநாட்டில் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

''இன்று எமது மக்களிடையே பாகுபாடுகாட்டுவது பெருமளவு குறைந்திருந்தாலும், சிலஇடங்களில் இருந்தே வருகின்றது. இதை நாம் முற்றுகத் தீர்த்து சகல மக்களும் சமமான நிலையில் வாழ வேண்டும். ஆலயங்கள், பாடசாலைகள், சனசமூகநிலையங்கள் பொது ஸ்தாபனங்களில் அனைவரும் சமத்துவமாக செயற்படவேண்டும். அதற்காக உதவிஅரசாங்க அதிபர்கள் பாடுபடவேண்டும்.

உதவி அரசாங்க அதிபர்கள், உடனடியாக கிராம சேவகர்கள், ஆலய தர்மகர்த்தாக்கள், சனசமூக கிராம அபிவிருத்தி பிரமுகர்களை மாநாடுமூலம் கூட்டி நல்லெண்ணத்துடன் இப் பிரச்

(6ம் பக்கம் பார்க்க)

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோயில்
இராஜகோபுரக் கும்பாபிஷேக
7வது ஆண்டுத் திருவிழா
சூலமங்கலம் சகோதரிகளின்
இன்னிசை விருந்து
இடம்: இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோயில்
காலம்-நேரம்: 30-8-78 புதன்கிழமை இரவு 10-00 மணி
இலங்கை போக்குவரத்துச் சபையால் விஷேச பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
0111

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு நேரெதிரே வீதிக்கருகாமையில் வீடு கட்டக்கூடிய புதிய அத்திவாரத்துடனும், கிணற்றுடனும் பல பயன்தரும் மரங்களும் கொண்ட 8½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: சிலோன் கொமேர்ஷல் கொம்பனி, 13, பலாலி வீதி, கோண்டாவில். 0179

5 பான்ட் சோனி சுப்பர் சென்சிட்டிவ் ரேடியோ (மொடல் நம் 1800) பட்டரி/மெயின் இரண்டிலும் பாவிக்கக்கூடியது; ஆண்களுக்குரிய சீக்கோ ஆட்டோ மாட்டிக் கைக்கடிகாரம் திகதியுடன் கூடியது. மினி இமேஸ்சன் ஹீட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: 109, பலாலி வீதி, கந்தர்மடம். 0170

CV தொடர்பிலக்க FORD டிலிவரி வான் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. முருகன் இன்டஸ்றீஸ், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 0183

குஞ்சுப்பரந்தன் சந்திக்கருகாமையில் நீர்ப்பாசன வசதியுள்ள 6 ஏக்கர் திறமான நெற்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. வே. தி. சம்பந்தர், கீதாஞ்சலி, டச்சு வீதி, சாவகச்சேரி. 0178

### தேவை

பிடவை வியாபாரத்தில் நன்கு அனுபவமுள்ள சேல்ஸ்மன் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கவும். கணேசானந்தாஸ் சில்க்பலெஸ், 15, நவீனசந்தை, யாழ்ப்பாணம். 0184

### தேவை

ஏஜன்சி நிறுவனம் ஒன்றிற்கு தமிழ், ஆங்கில அறிவுள்ள பெண் குமாஸ்தா தேவை. விபரங்களுக்கு கடிதமூலம் தொடர்பு கொள்க. விளம்பர இல. 0182, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 0182

யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபல்யமான அச்சுக்கூடத்துக்கு பிளேற்றன், சிலிண்டர் மிசின்களில் வேலைசெய்வதற்கும், அச்சுக்கோர்ப்பதற்கும், புத்தகம் கட்டுவதற்கும் தொழிலாளர் தேவை. இவ்வேலைகளில் பயிற்சிபெற விரும்புபவர்களும்விண்ணப்பிக்கலாம். விளம்பர இல: 0150, ஈழநாடு மேற்பார்த்து, யாழ்ப்பாணம். 0150

### தெல்லிப்பழை
### ப. நோ. கூ. சங்கம்
(வரையுள்ளது)

### பதவி வெற்றிடம்
தற்காலிக கிளை முகாமையாளர் தரம் 111

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தற்காலிக கிளை முகாமையாளர் தரம் 111 பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேவையான தராதரங்கள், மற்றும் தகமைகள் பற்றிய விளக்கங்கள் யாவற்றையும் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுத்து மூலம் அல்லது நேரடியாக வந்து பெற்றுக்கொள்ளலாம். சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரத்திலேயே விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். ரூபா 1/- செலுத்தி இரு படிவங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 78-09-14.

பொது முகாமையாளர்,
தெல்லிப்பழை
ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பழை.

78-08-26. 0181

### காணி தேவை

திருநெல்வேலி, கோண்டாவில் பகுதியில் யாழ்ப்பாணம் — பலாலி வீதியிலோ அல்லது கோப்பாய் பகுதியில் யாழ்ப்பாணம் ராஜ வீதியிலோ ஒரு ஏக்கருக்கு மேற்பட காணி விற்பனை செய்யவுள்ளோர் சகல விபரங்களுடனும் பின் வரும் விலாசதாரருடன் கடிதமூலம் விரைவில் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல: 0180,
C/o ஈழநாடு,
யாழ்ப்பாணம்.

0180

## சோல்பரி அரசியல் திட்டத்தில்

# தமிழர்களால் சதிசெய்தே

## 29-வது ஷரத்து உருவாக்கப்பட்டது

### சன்சோனி கமிஷன் முன் தேரோ

(கொழும்பு)

சோல்பரி அரசியல் திட்டத்தில் உள்ள 29-வது சரத்தை முன்னாள் செனட்டர் எஸ். நடேசன் வண. பிதா பீட்டர் பிள்ளை டாக்டர் ஜெனிலஸ் ஆகியோர் சதி செய்தே உருவாக்கினார்கள். சோல்பரிக் கமிஷனில் அப்போது பெரும்பான்மை இனத்தினர் குறைவாக இருந்தமையினாலேயே இவர்கள்ன்சதி முயற்சிவெற்றி பெற்றது.

இவ்வாறு யாழ். நாக விகாரையின் பிரதம குரு வண. கடவத்துவ நந்தராம தேரோ சன்சோனிக்கமிஷன் முன் தெரிவித்தரார்.

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. அண்டலூட் மணிவாசகம் சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

சோல்பரி அரசியல் சட்டத்தின் 29-வது ஷரத்தினுல் பௌத்த மதத்தின் பாதுகாப்பு அழிக்கப்பட்டது என்று சாட்சி மேலும் கூறிய போது குறுக்கிட்ட கமிஷனர் சிங்கள இளைஞர் முன்னணி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஹரிச்சந்திர விஜயதுங்காவிடம் நீர் இக்கூற்றை ஒப்புக்கொள்கிறீரா? என்று கேட்டதற்கு சட்டத்தரணி ஆம் எனப் பதில் அளித்தார்.

இக்கூற்றைமறுத்தகமிஷனர் திரு. சன்சோனி, 29-வது சரத்து மற்றைய மதத்தினரைப் பாதிக்காத வகையில் சிறுபான்மை மதத்துக்கு பாதுகாப்பு அளிக்கிறது என்றார்.

சாட்சி மேலும் கூறியதாவது:

தனிநாட்டுக் கோரிக்கையை மட்டுமல்ல, சமஷ்டிக் கொள்கையையும் நான் எதிர்க்கிறேன். இவை இரண்டுமே இந்த நாட்டுக்கு ஒவ்வாதன.

தனிப்பட்ட எவரையும் பாதிக்கக்கூடிய விதத்தில் நான் இங்கு சாட்சியமளிக்கவில்லை. ஒற்றுமையையும் அமைதியையும் கருத்தில் கொண்டும் எதிர்கால நன்மை கருதியுமே நான் இங்கு சாட்சிய மளிக்கிறேன்.

புத்தரும் விஜயனும் சிங்களவர் அல்லர். பௌத்த நூல்கள் அனைத்தும் சிங்களவருடையது அல்ல,

சித்தாத்தர் கூட ஒரு இந்து இளைஞர் எனவே போற்றப்பட்டுள்ளார்.

சட்: உலக சனத்தொகையில் பௌத்தாகள் ஐந்தில் ஒரு பகுதி.

சாட்சி: தெரியாது,

சட்: இலங்கைச்கு வந்த முதல் மனிதன் விஜயன்கூட இந்த நாட்டை ஆக்கிரமித்தே இங்கு வந்தனர். புத்தருடைய ஆசிர்வாதத்துடன் வந்த விஜயனும் நண்பர்களும் இலங்கையிலேயே மனைவிமாரைத் தேடிக்கொண்டனர்—ஆம்.

சட்: இலங்கையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஆயிரக்கணக்கான வருடங்களாக இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர்-ஆம்.

சட்: 1937ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் திகதி தொழில் பயிற்சிபெற்ற இந்தியர்கள் இங்கு வருவதைத் தடைசெய்ய வேண்டுமென்று டாக்டர் என். எம். பெரேரா சட்டசபையில் மசோதா கொண்டுவந்தார்-தெரியாது.

சட்; 37ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இம்மசோதா மீதான வாக்கெடுப்பின்போது மசோதா 29 வாக்குகளல் தோற்கடிக்கப்பட்டது. இம்மசோதாவை எதிர்த்த திருவாளர்கள் டி. எஸ். சேனநாயக்கா, எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா, கொத்தலாவலை, டட்லி சேனநாயக்கா ஆகியோரே பின்னர் பிரதமர்களாகப் பதவி வகித்தனர்-தெரியாது.

### 1926ல் பண்டா கூறியது. . . .

சட்: சமஷ்டி ஆட்சிதான் இலங்கையிலுள்ள பிரச்னைகளுக்குத் தீர்வுகாண ஒரே வழி ஒன்று காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா 1926ம் ஆண்டு கூறியதாக 'மோணிங்ஸ்டார்' என்ற பத்திரிகையில் செய்தி வந்தது தெரியுமா?

சாட்சி: தெரியாது. எனக்கு அந்தக் காலத்தில் அவ்வளவு அரசியல் அறிவு இல்லை. அதே பண்டாரநாயக்காதான் 56ம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தார். காலத்துக்குக் காலம் கருத்துக்களும் மாறுபடுகின்றன.

சட்: சமஷ்டி என்பது பிரிவினையல்ல நிர்வாகத்தைப் பன்முகப்படுத்துவதே.

சாட்சி: எப்படியிருந்தாலும் நான் சமஷ்டி அமைப்பை எதிர்க்கிறேன்.

சட்; அமெரிக்கா, ரஷ்யா, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் சமஷ்டி அமைப்பு இருப்பது தெரியுமா?

சாட்சி: மக்கள் கூறக் கேள்விப்பட்டிருக்கிறேன் அமெரிக்கா சக்திமிக்க மிகப்பெரும் நாடு ரஷ்யாவும் பெரியநாடு அங்கெல்லாம் சமஷ்டி சாத்தியமாகும். ஆனல் இலங்கை சிறிய நாடு எல்லைகள் கிடையாது எனவே இங்கு சமஷ்டியோ தனிநாடோ சாத்தியமில்லை.

சட்; இலங்கையின் பரப்பளவைவிட அரைவாசி பரப்பளவு (15,950 சதுரமைல்) சுவிட்சலாந்தில் சமஷ்டி அமைப்புஉள்ளது தெர்யுமா?

சாட்சி; அங்கே ஒரே இன மக்கள் வாழ்வதால் பிரச்னை இல்லை. (ம-இ)



சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த திருக்கேதீஸ்வர ஆலய வசந்த மண்டபத்துக்கான அடிக்கல்லை ஷேக் மூஸாஜி தம்பதிகள் சம்பிரதாயபூர்வமாக நாட்டிவைக்கிருர்கள்.

### திருக்கேதீஸ்வராலய

## வசந்த மண்டபச் செலவுகளை ஷேக் மூஸாஜி ஏற்பார்

கடந்த 12ம் திகதி திருக்கேதீஸ்வர ஆலயத்தில் தனித்துவமான விசேஷ நிகழ்ச்சியொன்று இடம்பெற்றது. கொழும்பில் பிரபல்யமான பரோபகாரியான ஷேக் எஸ். எச். மூஸாஜியும் அவரது துணைவியார் திருமதி மூஸாஜியும் பழம் பெருமை மிக்க திருக்கேதீஸ்வரர் ஆலயத்துக்கு விஜயம்செய்து வசந்த மண்டபத்துக்கான அடிக்கல்லை நாட்டினர்கள்.

வேதபாராயணம், திருமுறை ஓதல், நாதஸ்வர இசை முழங்க மூஸாஜி தம்பதியினர் அடிக்கல்லை சம்பிரதாயபூர்வமாக நாட்டிவைத்தனர்.

மன்னர் உதவி அரசாங்க அதிபர், அடம்பன் உதவி அரசாங்க அதிபர் மற்றும் மன்னார்க்கச்சேரி உயர்அதிகாரிகள், ஆலய நிர்வாகிகள் முதலியவர்களுடன் ஏராளமான பொதுமக்களும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

திருக்கேதீஸ்வரம் புனருத்தாரண திருப்பணிச்சபையின் உபதலைவரும் பரமேஸ்வராக் கல்லூரியின் முன்னள் அதிபருமான திரு. எம். ஞானப்பிரகாசம் அங்கு நிகழ்த்திய உரையில், ஷேக்மூஸாஜி பரந்த உள்ளம் கொண்ட மிகச்சிறந்த முஸ்லிம் பெரியார் என்றும், அவரதுதாராளமனப்பான்மையின் காரணமாக அவர் பௌத்தம், இந்து, கிறிஸ்தவ சமயங்களுக்கும் பரோபகாரம் புரிந்துவருகிருர் என்றும் இந்தவகையில் அவர் இந்து ஸ்தலங்களை தமது ராஜ்யங்களில் பேணிப் பாதுகாத்தவர்களான, 16ம் நூற்றுண்டில் வாழ்ந்த முகலாய சக்கரவர்த்தி மகா அக்பருக்கும் மைசூரை ஆண்ட திப்பு சுல்தானுக்கும் இணையானவர் என்றும் குறிப்பிட்டார்.

திருப்பணிச்சபையின் செயலாளர் திரு. ஆர். நமசிவாயம் ஷேக்மூஸாஜி தம்பதியினருக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் இனத்தவர்களின் மூதாதையான விஜயகுமாரன் 6வது நூற்றுண்டளவில் இங்கு வந்து இத் தலத்தில் பூஜைவழிபாடு செய்தான் என்றும், இவ்வாறு பழம்பெருமைகொண்ட இத்தலத்தின் புனருத்தாரனத்தில் ஷேக் மூஸாஜி தம்பதியினர் அக்கறைகொண்டிருப்பது பாராட்டுக்குரியது என்றும் குறிப்பிட்டார்.

வசந்தமண்டபத்தின் நிர்மாண வேலைகளுக்கான செலவுகளைப் பொறுப்பேற்றமைக்காகவும், திருக்கேதீஸ்வரத்துக்கு வருகைதந்து அடிக்கல்லை நாட்டியமைக்காகவும் இந்துக்கள் சார்பில் அவர்களுக்கு திரு. நமசிவாயம் நன்றிதெரிவித்தார்.

### இன்று
(பண்டத்தரிப்பு)

முள்ளானையில்புதிதாகநிறுவப்பட்டுள்ள வட்ட மின் விநியோகத் திட்டத்தை எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் இன்று முற்பகல் சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்துவைப்பார். முள்ளானை பிள்ளையார் ஆலயத்தில் இதையொட்டி நடைபெறும் விசேட அபிஷேக பூசையிலும் திரு. அமிர்தலிங்கம் கலந்துகொள்வார். அதனைத் தொடர்ந்து மின் விநியோகத் திட்டத்தை அவா ஆரம்பீத்துவைப்பார் (உ)

## பலாலி விமான நிலையத்தில் அமிரை வழி அனுப்புவர்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடு செல்லும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலதிபரும் எதிர்கட்சித் தலைவருமான திரு. அ.அமிர்தலிங்கமும் அவரது பாரியாரும் இம்மாதம் 31-ந் திகதி காலை பலாலிவிமான நிலையத்தில் சிறப்பான முறையில் வழிஅனுப்பி வைக்கப் படுவர்.

சர்வதேச பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுவதற்காக ஜயேமக்கா செல்லும் திரு. அமிர்தலிங்கம் கொழும்பிலிருந்து அடுத்த மாதம் 3. ந் திகதி புறப்படுவார்.

இலங்கையில் இருந்து செல்லும் குழுவுக்கு வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தலைமைதாங்குவார். இலங்கைக்குழுவில் மதவாச்சித்தொகுதி பேரவை உறுப்பினர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா உட்பட ஐவர் ஜமேய்க்கா செல்வார்கள். (கெ-இ)

ஈழநாடு
The Eelanaadu

# 'தமிழீழத்தில் அடிமையென்று எவரும் இருக்கமாட்டார்கள்

## பிறந்ததின விழாவில் 'அமிர்'

(சுழிபுரம்)

''தமிழ் மன்னன் கடைசியாக ஆண்ட நாடு உலகிலேயே யாழ்ப்பாணம் தான் என்பதற்கு சரித்திரம் சான்றாகும். உலகம் பூராவும் தமிழன் பரந்து வாழ்ந்தாலும், தனக்கென ஒரு நாடு, அரசு இல்லாமல் இருக்கின்றனர். இக்குறையைப் போக்க நாம் ஈழத்தில் நாம் எமது பகுதியை நாமே ஆளவும், சுதந்திரமாக இயங்கவும் செய்வதன் மூலம் உலகிலுள்ள தமிழர்களுக்கு எல்லாம் முன்மாதிரியாகவிளங்கவுள்ளோம். நாம் யாருக்கும் அடிமையாக இருக்காமல் அதே வேளையில் யாரையும் அடிமையாக்காத அமைப்பேயே நாம் தமிழ் ஈழத்தில் உருவாக்குவோம்'',

இவ்வாறு பண்ணாகம் அண்ணா கலைமன்ற ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டுசிறப்புரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

வழக்கம்பரை அம்மன் கோயில் வீதியில் அமைந்துள்ள மோகன் அரங்கில் நடைபெற்ற விழாவிற்கு மன்றத் தலைவர் பண்டிதர். ப. இராசகுரு தலைமை வகித்தார்,

திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் எமக்கிடையே கட்டுப்பாடு தேவை. அண்ணாவின் பெயரைத் தாங்கி இயங்கும் கலைமன்றத்தினர் செய்யும் நல்ல பணிகளை எல்லாம் நாடும் நாமும் அறிவோம். சாதி பேசி சண்டைசெய்த காலம் போய் சமாதானத்துடன் யாவரையுமே மதித்து வாழும் நிலைமையில் நாம் இன்று வாழ்கின்றோம்'' என்றார்.

செந்தமிழர் இயக்கச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் உட்பட மற்றும் பலரும் பேசினர். (உ)

## வாழ்க்கைச் செலவு உயர்வு

புதிய வரவு - செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படுமென்றும் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்குமென்றும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன தெரிவித்திருக்கிறார்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்திருப்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளது. மக்களின் கஷ்டங்களை தாங்கள் உணராமலில்லையென்றும் ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

வாழ்க்கைச் செலவு உயர்வைவைச் சமாளிப்பதற்காக அரச ஊழியருக்கும் தனியார்துறையினருக்கும் விசேஷ அலவன்ஸ் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கிறது. ஆயினும் விலைவாசிகள் மேலும் மேலும் அதிகரித்து வருவதால் சம்பள உயர்வு அளிக்கப்படவேண்டியது அவசியமே.

சம்பள உயர்வு அளிப்பதனல் மேலும் மேலும் வாழ்க்கைச் செலவு அதிகரிக்குமே ஒழிய குறைவதற்கு வாய்ப்பில்லை. அரசாங்க ஊழியருக்கும் தனியார்துறையினருக்கும் சம்பள உயர்வு அளிக்கையில் அன்றாடம் தொழில் செய்து பிழைப்பவர்களே அதிகம் பாதிக்கப்படுவார்கள்.

சம்பள உயர்வுக்குப் பதிலாக விலைவாசியைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

நகர்ப்புற மக்களின் வருமானம் அதிகரித்தால் மட்டும்போதாது. விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டால்தான் உள்நாட்டில் உணவுப் பொருள் உற்பத்தி அதிகரிக்கும். விவசாயிகளின் வருமானம் அதிகரித்தால் அவர்கள் கைத்தொழில் உற்பத்திப் பொருள்களையும் மற்றும் நுகர் பொருள்களையும் வாங்கிச் சேமித்துவைக்கத் தொடங்குவர். இதனல் கைத்தொழில்களும் இதர உபதொழில்களும் வளர்ச்சியடையும்.

எனவே கிராமப்புற விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கக் கூடியதாக அரசாங்கம் தனது கொள்கையை வகுத்துக் கொள்வதும் அவசியமாகும்

அரசாங்கத்தின் இன்றைய இறக்குமதிக் கொள்கையால் விவசாயிகள் குறிப்பாக வடபகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

வெங்காயம், மிளகாய் போன்ற பொருள்களுக்கு மட்டவிலை நிர்ணயிட்டாது பற்றி ஆராய்வதற்காக பிரதி வர்த்தக அமைச்சர் இன்று யாழ்ப்பாணம் வந்து ஒரு மகாநாடு கூட்டவிருக்கிறார்,

இதேபோன்று இறக்குமதிக் கொள்கையையும் அரசாங்கம் மறுபரிசீலனை செய்வது உள்நாட்டில் உற்பத்தி அதிகரிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கலாம்.

வாழ்க்கைச் செலவு உயர்வைத் தடுப்பதற்கு இது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியமாகும்.

## "தீண்டாமை உள்ளவரை இனவிடிவு இல்லை"

### பருத்தித்துறை எம். பி. வலியுறுத்து

(நெல்லியடி)

''தமிழ்மக்களுக்கு இடையே இருந்து வரும் சமூகக் குறைபாடுகள் இல்லாது ஒழிதல் வேண்டும். அட்பொழுதுதான் நமது இனம் விடுதலைஅடைய முடியும் நாம் எமக்குள் ஒரு பகுதியினரை தீண்டக்தகாதவர் என்று ஒதுக்கி வைத்துக் கொண்டு உரிமைகள் கேட்பது விசித்திரமானது.''

இவ்வாறு பருத்தித்துறை தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் தொண்டமனாற்றில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமான கலந்துரையாடலில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார். திரு. வி. என். நவரத்தினம் எம். பி. பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தமிழினம் சாதி என்று சொல்லி சின்னபின்னப்பட்டிருப்பது வேதனைக்குரியது. அதனை அகற்ற நாம் முன் வந்துள்ளோம். இப் போராட்டம் நீண்டகால போராட்டம் மட்டுமன்றி தமிழ் மக்களை ஒன்று சேர்த்து புதிய சமுதாயம் ஒன்றினை அமைக்கவும் வழிசமைக்கும்.

திரு. வண்ணை ஆனந்தன் பேசுகையில் புதிய சமுதாயம் அமைக்கப்பட வேண்டியுள்ளது. இளைஞர்கள் மட்டுமல்ல இன் நாட்டிலுள்ள இசைக்கலைஞர்கள் சமயப் பிரசங்கிகள் ஆகியோர் தீண்டாமை ஒழிப்பில் முக்கிய பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும். இந்து சமய நிறுவனங்களும், பிராமணர்களின் சங்கங்களும் இத்தகைய தீண்டாமை ஒழிப்பு போராட்டத்திற்கு ஆதரவு வழங்கினல் தீண்டாமை ஒழிப்பு என்பது சாதாரண விடயமாகிவிடும் என்றார். திரு. த. இராசலிங்கம் எம். பி, பேசுகையில், ஒரு பகுதியிலுள்ள கோயிலுக்கு அப்பகுதியைச் சேராத தணடத்தகாதவா எனககூறக கொள்வோர் சென்று வந்தால் மட்டும் போதாது. இது உண்மையான தீர்வுமன்று. பதிலாக கோயில் சுற்றாடலிலுள்ள மக்கள் பயமெதுவுமின்றி சென்றுவரக் கூடிய நிலை ஏற்படவேண்டும். மக்களின் மனமாற்றமே முக்கியமாக இப்பிரச்னையில் தேவை'' என்றார். (உ)

## குளங்கள் புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறைத் தொகுதியில் உள்ள சகல குளங்களும் வெகு விரைவில் புனரமைக்கப் படவிருக்கின்றன.

அண்மையில் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள சகல குளங்களையும் நீர்ப்பாசன பொறியியலாளருடன் சென்று பார்வையிட்டார்.

புனரமைப்பு வேலைகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப் படும் என திரு. துரைரத்தினம் தெரிவித்தார். (உ)

## மணிவாக்கு

சமைக்கத் தெரிந்த மனைவிசமைக்க முடியாது என்று பிடிவாதம் பிடித்தால் ஏற்படுவது மன வருத்தம் மட்டுமே ஆனல் சமைக்கத் தெரியாத மனைவி சமைப்பேன் என்று பிடிவாதம் பிடித்தாலோ மனவருத்தத்துடன் அஜீரணமும் ஏற்படும்.

—ராபர்ட்ஃபிராஸ்ட்

## பரு. வியாபாரிகளுக்கு எச்சரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை புலோலி ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் விலைப் பட்டியல்களை வைத்திருக்காத வர்த்தகர்கள் கடந்த வியாழனன்று பொலிசாரினல் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

இவ்வாறு விலைப்பட்டியல்களை வைத்திருக்காத வர்த்தகர்கள் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று ஒருகிழமைக்குள் விலைப்பட்டியல்கள் தொங்க விடப்படாவிடின் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை செய்யப்பட்டனர். (அ)

## ப.நோ. கூ. சங்க பட்டதாரிகள் கோரிக்கை

(வண்ணார்பண்ணை)

வடபகுதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் 21 பயிற்றப்பட்ட பட்டதாரிகளுப் கூட்டுறவு இலாகாவிலிருந்து விடுபட்டு வேறு இலாகாக்களுக்கு பதவி மாறிச்செல்ல முயற்சி எடுத்து வருகின்றனர்.

இது சம்பந்தமாக மேற்படி 21 பேர் கொண்ட பட்டதாரிகள் சங்கம் எதிர்க்கட்சித்தலைவரினூடாக அரசாங்கத்துக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது. இது விஷயமாக திட்டமிடல் அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தி நடவடிக்கை எடுப்பதாக எதிர்க்கட்சித்தலைவர் வாக்குறுதி

(4 ம் பக்கம் பார்க்க)

# சமூகக் குறைபாடுகளை ஒழிக்க நாடகப் போட்டி

## கூட்டணி நடத்துகின்றது

(யாழ்ப்பாணம்)

சமூகக்குறைபாடுகளின் அவசியத்தையும், அவற்றை எவ்வாறு சுமுகமான முறையில் ஒழித்துக் கட்டலாம் என்ற கருத்தையும் வலியுறுத்தும் வகையில் நாடகப் போட்டியொன்றை, தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நடாத்தவிருக்கின்றனர்.

சமூகக் குறைபாடுகள் பிரசாரங்கள் தொடர்பாகவே கூட்டணியினர் மேற்படி நாடகப் போட்டியை நடாத்தவிருக்கின்றனர்.

இந்நாடகப் போட்டியில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று நாடகங்களுக்கும் முறையே ரூ. 500, ரூ. 300, ரூ. 200 ரொக்கப் பரிசுகளாக வழங்கப்படவிருக்கின்றன. மற்றும் சிறந்த நடிகர் தயாரிப்பாளர்களுக்கும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பொறுப்பாக திரு எஸ். எஸ். கணேசபிள்ளை (வரணியூரான்) நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நாடக மன்றங்களும், தனிப்பட்டவர்களும் இப் போட்டியில் பங்கு பற்றலாம் என்றும் நாடகங்கள் 45 நிமிடத்திற்குக் குறையாமலும் ஒரு மணித்தியாலத்துக்கு மேற்படாமலும் தயாரிக்கப்பட வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடகப் போட்டிக்கான விண்ணப்பங்கள், செப்டம்பர் மாதம் 7-ம் திகதிக்கு முன்னர், 'எஸ். எஸ். கணேசபிள்ளை [நாடகப் பொறுப்பாளர்], தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலகம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஈ)

## றெனி பொன் செல்வார்

(கொழும்பு)

அனைத்துலக பாராளுமன்றப்பிரதிநிதிகள் மாநாடு அடுத்தமாதம் 5-ம் திகதி பொன்னில் நடைபெறுகிறது.

இலங்கைப் பிரதிநிதியாக நிதியமைச்சர் திரு. றொனிடி மெல் கலந்து கொள்வார். (உ)



## கண்மணி நீயே நல்லைக் கந்தனே போற்றி!

அற்புத குருவே போற்றி ஆறுமா முகனே போற்றி
சிற்பர நடன மாடும் திருமுரு கையா போற்றி
பொற்புய ரடியார் வேண்டும் பொருளெலா மினிது நல்கும்
கற்பக மணியே நல்லைக் கந்தனே போற்றி போற்றி

தனிநெடும் புனத்து வள்ளி தனைமணம் புரிய வந்த
முனிவனே போற்றி வேத முதல்வனே போற்றி அன்பில்
இனியவர் மனம்சுகிக்கும் இனியனே போற்றி தேமாங்
கனியென நின்ற நல்லைக் கந்தனே போற்றி போற்றி

ஆப்பிழுத் திடுங் குரங்காய் அவலமுற் றிடுவார் செங்கை
கூப்பிநின் றயில்வே லென்று கூப்பிட மயிலிற் றோன்றித்
தீப்படு வினையகற்றித் திருவருள் நோக்கம் செய்து
காப்பவ னியே நல்லைக் கந்தனே போற்றி போற்றி!

ஆதார மேதுமின்றி யழுங்குவார் உருகி யன்புப்
போதார வேண்ட ஞானப் புனிதனாய்க் காட்சிநல்கிப்
பாதார விந்தம் சேர்ப்பாய் பாவியேன் பதரு தோர்சொல்
காதார உரைப்பாய் நல்லைக் கந்தனே போற்றி போற்றி

சண்முக மணியென்றுன்றன் தாள்பணி வார்க்குச் செல்வ
வண்முகமுண்டு கல்வி வளமுக முண்டு தெய்வத்
தண்முகமுண்டு மேலாம் தவமுண்டு பண்ணும்
கண்மணிநீயே நல்லைக் கந்தனே போற்றி போற்றி!

--அருட்கவி சி. விநாசித்தம்பி

# இந்திரா கொலை முயற்சி வழக்கு "கருணாநிதியுடன் 38பேர் ஆஜராக வேண்டும்"

## செப். 12 வரை விசாரணை ஒத்திவைப்பு

சென்னை, ஆக. 29

மதுரையில் கடந்த வருடம் அக்டோபர் மாதம் முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு கறுப்புக் கொடிகாட்டி ஆர்ப்பாட்டம் நடத்தி திருமதி காந்தியைக் கொலைசெய்ய முயன்றதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ள 134 பேரில் முன்னாள் தமிழக முதல்வர் திரு. மு கருணாநிதி, திரு. அன்பழகன், பா. உ. சண்முகம் உட்பட 38 பேர் வழக்கு விசாரணைகளின்போது நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும்.

மேற்படி கொலை முயற்சி வழக்கு நேற்றுசென்னைமெட்ரபொலிட்டன் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அரச தரப்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. எஸ். ராஜமாணிக்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கூற்றுக்கு, எதிர்ப்புத் தெரிவித்த எதிரிகளின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. எம். சண்முகம் குறிப்பிட்ட எதிரிகள் எவரும் விசாரணைகளின் போது ஆஜராகத் தேவையில்லையென்றும் இது தொடர்பாகத் தாம் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்ய உள்ளதாகவும்தெரிவித்தார்.

நீதிபதி மேல் விசாரணையை செப்டம்பர் மாதம் 12ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (இ)

## "சுபாஸ் சந்திரபோஸ் இன்னும்உயிரோடிருக்கிறர்"

### ஜனதா எம். பி. தகவல்

புதுடில்லி, ஆக. 29

சுபாஸ்சந்திரபோஸ் இன்னமும் உயிரோடு இருக்கிறரென்றும் சபையில் அது பற்றிய விபரங்களைச் சொல்லத்தமக்கு உரிமையில்லையென்றும்ஜனதா கட்சி எம். பி. ஒருவர் நேற்று லோகசபையில் தெரிவித்தார்.

இதுதொடர்பான மசோதா ஒன்றை லோகசபையில் சமர்ப்பிக்கும் போதே அவர் இவ்வாறு சொன்னர். சுபாஸ் சந்திரபோஸ் எங்குள்ளார் என்பதை காலம் வரும்போது மக்கள் அறிந்து கொள்வர் என்றும் அவர் கூறினர்.

இது சம்பந்தமான மசோதாவை பிரதமரின் வேண்டுகோளுக்கிணங்க அவர் வாபஸ் பெற்றுக்கொண்டார். (உ)

## கிளிநொச்சியில் கூட்டுறவாளர் தினவிழா

(உருத்திரபுரம்)

பரந்தன் மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் 5 வது சர்வதேச கூட்டுறவுதினவிழா இன்று கிளிநொச்சி ருெட்றிக்கோ மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

பிரதம விருந்தினராக கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி கலந்து கொள்வார்.

பரந்தன் கூட்டுறவு ஆக்க உதவிஆணையாளர் திரு. பொ. சமலநாதன் திருவாளர்கள் கே. சுப்பிரமணியம் ரி. மார்க்கண்டு உட்பட பலர் சொற்பொழிவு நிகழ்த்துவர்.

இவ்விழாவை யொட்டி ஆண்கள் பெண்களுக்கு சைக்கிளோட்டப்போட்டிகளும் இன்று காலை நடைபெறவுள்ளன.

இரவு நாடகப்போட்டியும் இடம் பெறும். (உ)

## நேரடி மோதல் ஏற்படலாம் என அச்சம்

லண்டன், ஆக. 29

லெபனன் விவகாரம் சம்பந்தமாக சிரியாவும் இஸ்ரேலும் நேரடியாக மோதிக் கொள்ளும் நிலை ஏற்படலாம் என்று அரசியல் அவதானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். [உ]

## ஆந்திராவில் கலவரம்: 165 பேர் கைது!

ஹைதராபாத், ஆக. 29

ஹைதராபாத்தில் நடைபெற்ற கலவரம்ஒன்றுதொடர்பாக பொலிசார் 165 பேரைக் கைதுசெய்துள்ளனர்.

இக்கலவரத்தில் 16 பேர் காயமடைந்ததாக அறிவிக்கப்படுகிறது.

கலவரத்தையடக்க பொலிசார் கண்ணீர்ப்புகைப்பிரயோகம் செய்தனர்.

நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுவிட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இக்கலவரத்தில் தீவைப்புச் சம்பவங்களும் இடம்பெற்றதாகக் கூறப்படட்டது. (உ)

## ப. நோ. கூ.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்துள்ளதாக இச்சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

தமது தகுதியும் திறமையும் கூட்டுறவுச்சங்கங்களில் அதிகமாகப் பயன்படமுடியாதிருப்பதாகவும் வேறு இலாகாக்களில் தமக்கு வேலை பெற வசதி செய்யுமாறும் இவர்கள் தமது மகஜரில் தெரிவித்துள்ளனர். (அ)

## எம். ஜி. ஆருக்கு கறுப்புக் கொடி: 197 பேரும் விடுதலை!

சென்னை, ஆக. 29

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மதுரைக்குச் சென்றபோது கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்திய அனைவரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர்.

மதுரை உசிலம்பட்டியில் நடந்த இந்தசம்பவம்தொடர்பாக முன்னெச்சரிக்கையாக 48 பேரும், பின்னர் 147பேரும் கைதுசெய்யப் பட்டிருந்தனர்.

இவர்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியமில்லையென்று தமிழகஅரசு தீர்மானித்ததனையடுத்துஇவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். மதுரைப் பல்கலைக்கழகத்துக்கு காமராஜரது பெயர் சூட்டப்பட்டதை ஆட்சேபித்து பார்வாட்பிளாக் கட்சியைச் சேர்ந்த பிரஸ்தாப நபர்கள் கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர். (உ)

## "3-ம்வகுப்புக்குமேல்படிக்க முடியாத நிலை ஏற்பட்டது"

### தனது இளமைக்காலம் பற்றி எம். ஜி. ஆர். கூறியது

சென்னை, ஆக. 29

'மூன்ருவது வகுப்புக்கு மேல் படிக்க முடியாமல் நாடகத்தில் சேர்ந்து வேலை செய்யும்நிலை எனக்கு ஏற்பட்டது.'

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி.இராமச்சந்திரன் சென்னையில்நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் தமது உரையில் கூறியதாவது:

#### துன்பத்தின் சாயல்

'நன்றி என்பது வார்த்தை அளவில் சொன்னுல் பயனில்லை பெரியவர்கள் செய்த தியாகத்தையும் தொண்டையும் பாராட்டி மகிழ்வது நம் கடமையென்ருலும், அதே நேரத்தில் அவர்கள் வகுத்த நல்ல கொள்கைகளை பின்பற்றுவதுதான் நாம் அவர்களுக்கு காட்டும் நன்றியாகும்.

சுதந்திரத்திற்காக பாடுபட்ட தியாகம செய்தவர்களுடைய குடும்பத்தினர் எங்கெங்கு இருக்கிருர்கள் என்பதை கணக்கு எடுத்தும் பட்டியல் போட்டும் அறியமுடியவில்லை. துன்பத்தின் சாயலாக நிழலாக இருக்கும் அவர்களை என்னைப் போன்று பதவியில் இருப்பவர்கள் நினைத்துப் பார்க்கத் தவறினல் எங்கள் கடமையிலிருந்து நாங்கள் நழுவுகிறேம் என்று அர்த்தம்.

அகத்திலும் புறத்திலும் சுதந்திரத்தோடு வாழும் நிலையை பெற்று விட்டோமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

#### வகுப்புவாதம்

வகுபுவாதம் இருக்குமானல் அது சுதந்திரத்துக்கு பாதகமானது என்று அறிஞர் அண்ணு கூறினர். இந்திய துணைக் கண்டத்தில் ஆங்காங்கே சில நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

இந்திய சுதந்திரத்திற்காக பாடுபட்டு உழைத்துப் பெற்ற சுதந்திரத்தை போற்றி பாராட்டி 31 ஆண்டுகள் ஆகிவிட்டதென்ருலும் அதற்காக பாடுபட்டவர்களின் கொள்கை முழுமையாக நிறைவேறி விட்டதா என்ருல் இல்லை.

வகுப்பு பூசல்கள் மதவெறி ஜாதி முரண்பாடு, ஆகியவை ஆங்காங்கே தலைதூக்கி பிறகு அடக்கப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட மக்களும் ஜாதி இந்துக்களும் சரிசமமாக வாழும் நிலை உருவாக வேண்டும்.

#### மது அரக்கன்

'மனிதன் சுயநினைவில் இருக்கும் போதே தவறு செய்யும் சூழ்நிலை ஏற்படுகிறது, சுயநினைவையும் இழந்து தவறு செய்யும் நிலை ஏற்படுமானல் மது அரக்கன் என்ற பேயை தமிழகத்தை விட்டு விரைவில் ஓட்டியாக வேண்டும்.

#### மாணவர்கள்

3-வது வகுப்புக்குமேல் படிக்க முடியாமல் நாடகத்தில் சேர்ந்து வேலை செய்யும்நிலை எனக்கு ஏற்பட்டது. அப்படிப்பட்ட நிலையில பலர் இருக்கிருர்கள்.

நம்முடைய மாணவர்கள் இந்தியாவிலும், உலகெங்கிலும் உள்ள ஆராயச்சியாளர்கள் விஞ்ஞானிகள், பகுத்தறிவாளர்களால் பாராட்ட பெற்று இப்படிப்பட்ட மாணவர்கள் தமிழ் நாட்டில்தான் இருக்கிருர்கள் என்றநிலை ஏற்பட ஒத்துழைக்க வேண்டும். வழக்குகள் போடுவது தான் அரசுக்கு பெருமை என்பதை ஏற்கமுடியாது. அதே சமயத்தில், தவறுகளை கேட்பாரில்லாமல், இருக்கும் நிலையும் பொருத்தமாக இருக்காது.

பழிவாங்கும் தன்மையில் இந்த அரசு எதையும் செய்யாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இது அண்ணுவின் மீதுஆணை.

அரசாங்கம் அதிகாரிகள், காவல்துறையினர் தவறு செய்தால் மக்கள் சுட்டிக் காட்டவேண்டும். அரசாங்க அதிகாரிகள் மீது தவருன செய்திகள் கிடைத்தால் அரசுக்கு சொல்லுங்கள். அந்த

(5-ம் பக்கம் பார்க்க)

## ஹிந்தித் திணிப்பு: "கெஞ்சுதல், மிஞ்சுதலுக்கு முடிவுகட்டியாக வேண்டும்"

### திராவிடர் கழகத் தலைவர் ஆவேசம்

சென்னை, ஆக. 29

இந்தியை எதிாத்து போர் முரசு கொட்டுவோமென்று கி. வீரமணி கூறினர்.

மத்திய அரசின் இந்தித் திணிப்பை எதிர்த்து சென்னை பெரியார்திடலில் இந்தி எதிர்ப்புமாநாடுநடந்தது.

மாநாட்டுக்கு ராஜா சர் முத்தையா செட்டியார் தலைமை தாங்கினர். குன்றக்குடி அடிகள் மாநாட்டைத் தொடக்கி வைத்தார்.

தி. மு. க. தலைவர் கருணாநிதி, முஸ்லிம் லீக் தலைவர் அப்துல்சமது, எஸ். எஸ். மாரிசாமி, கி. ஆ. பெ. விசுவநாதம், ஆற்காடு வீராசாமி, பெருஞ்சித்திரனர், சாதிக் பாட்சா, திருமறவன், எம். செல்வராஜ் (எம். எல். ஏ)) ஆகியோர்மாநாகட்டில்கலந்து கொண்டனர்.

திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அனைவரையும் வரவேற்றுப் பேசினர். அவர் பேசுகையில் கூறியதாவது:

நேருவின் வாக்குறுதி என்பது இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை இந்தி ஆட்சி மொழியாகாது. ஆகக்கூடாது. அதைப் பற்றிய முடிவு இந்தி பேசும் மக்களிடம் கூடாது.

#### அரசியல் சட்டதிருத்தம்

இந்தி பேசாத மக்களிடம் தான என்பதை அரசியல் சட்டத்தில்எழுதிவிடலாம். அதற்காக ஒருமுறை அரசியல் சட்டத்தை திருத்தலாமே என்று கேட்காத தலைவர்களேஇல்லை. இதை மத்திய அரசு காதில் போட்டுக்கொள்ளவே தயாராக இல்லை என்பதைத்தானே வெகு நன்ருகப் புலப்படுத்துகிறது.

இந்த நிலையில் இந்தியை எதிர்க்கிறேம். எங்களுக்குக் கொஞ்சம் காலக்கெடுகொடுங்கள் என்று நாம் கெஞ்சுவதும் அதற்கு அவர்கள் மிஞ்சுவதுமாக இருக்கும் போக்குக்கு முடிவுகட்டவே இம்மாநாடு.

இன்றுபோல் என்றும் ஆங்கிலமே தொடரவேண்டுமென்பது நமது ஏகோபித்த முடிவாக இருந்தால் அது சிறப்பானது.

பலவந்த உணர்ச்சிகளைப் படைபல பராக்கிரமத்தை காட்டி பிடிவாதம் காட்டுவதானல் நாம் தாளமுத்து, நடராசனுவதைத் தவிர வேறு வழியே இல்லை.

மணவலககு உரிமையுள்ள இந்த நாட்டில் ஏன் பிடிக்காத மொழி விலச்கு உரிமையில்லை என்று கேட்போம். கேட்கக் கூடாதா?

#### போர் முரசு

எனவே பெரியாரும் அண்ணுவும் 1948ல் கொட்டிய இந்த இந்திப் போர்முரசினை மீண்டும் நாம் கொட்டுவோம். போராட்டத்தை தொடக்குவோம். மானமுள்ள மக்களுக்காக போராடுவோம்.

மானத்தோடு போராடி மடிந்தாலும் தவறு இல்லை, பின் சந்ததியார் மேலும் வீரத்தோடு போராடி நாம் விட்டுச் செல்லும் பணியை முடிவுக்குக் கொண்டுவருவார்கள்." இவ்வாறு வீரமணி பேசினர்.

#### மலர் வளையம்

முன்னதாக வீரமணி, வக்கீல் துரைசாமி மற்றும் திராவிடர் கழகப் பிரமுகர்கள் மூலகொத்தளத்திலுள்ள இந்தி எதிர்ப்புவீரர்கள் தாளமுத்து, நடராசன் கல்லறைக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்கள்.

(வெள்ள-நிரு)

## ரமலான் சிந்தனைகள்

"எவராகிலும் லைலதுல் கத்ரி இரவில் ஈமானுடனும், நன்மையை ஆதரவு வைத்தும் நின்று வணங்குவாராயின் அவரின் முன்சென்ற பாவங்கள் மன்னிக்கப்படும்" என்று எம்பெருமானர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவுளமாகியுள்ளார்கள்.

அறிவிப்பவர்: ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி)

ஆதாரநூல்: புகாரி

தொகுப்பு: ஏ. ஸி. எம். மஸ்ஹூர் - யாழ்நகர்.

## 3-ம் வகுப்பு...

[4-ம் பக்கத் தொடர்ச்சி[

சுதந்திரம் மக்களுக்கு இருந்தாக வேண்டும்.

சுதந்திரம் சில கோடிகளை வைத்திருப்பவர்களுக்கு மட்டுமல்ல. ஏழை மக்கள் — துன்பத்தில் வாடும் மக்களுக்கு நல்ல பலனைகொடுத்து அவர்கள் வசதியாக வாழும் நிலை தமிழகத்திலும், இந்தியாவிலும் ஏற்பட வேண்டும் என்று அண்ணு விரும்பினுர்.

இதுதான் அண்ணுவின் கொள்கையின் விளைவு அந்த விளைவை அறுவடையாக்கிக் கொள்ள வேண்டும்.

### அரிவாள்-கதிர்

அரிவாள், நெல் கதிர்களை அறுக்க பயன்படும். அதை மக்களை வாழவைக்க பயன்படுத்தவேண்டும். மக்களை அழிக்க பயன்படுத்தக்கூடாது.

தவறுகள் எங்கிருந்தாலும் சுட்டிக்காட்டுங்கள். என்னிடம் தவறு இருந்தாலும் சுட்டிக் காட்டுங்கள்.

(வெள்' நிருபர்)



ஈழத்துக்கு வருகை தந்த இசைவாணி கே. பி. சுந்தராம்பாளுடன் மாவிட்டபுரம் பூங்காவன உபயகாரர் (லொறிச் சொந்தக்காரர், ஊழியர்) காணப்படுகின்றனர். இவர்களே அம்மையாரை மாவிட்டபுரம் பூங்காவன விழாவுக்கு அழைத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## படகோட்டிகள் கைது!

சென்னை, ஆக. 29

சென்னைக்கு அருகே எண்ணூரில் நடைபெற்ற படகு விபத்து சம்பந்தமாகத் தேடப்பட்டுவந்த இரு படகோட்டிகளும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுவிட்டனர்.

படகு விபத்தையடுத்து பிரஸ்தாபபடகோட்டிகள் இருவரும் தப்பியோடித்தலைமறைவாகத் திரிந்துவந்தனர்.

6 பெரியவர்கள் மட்டுமே செல்லக்கூடிய இப்படகில் 32 பள்ளி மாணவர்கள் (வயது 16-15) ஏற்றப்பட்டு நடுக்கடலில் படகு கவிழ்ந்ததால் 15 மாணர்கள் பலியானது தெரிந்ததே.

விபத்தில் இறந்தோர் குடும்பங்களுக்கு தமிழக அரசு தலா 5,000 ரூபா நிதியுதவியளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

[உ[


**Rio** (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
KARATE AMAZONS
From: 1-9-78
FRIDAY FOSTER
(adults only)

**நாகம்ஸ்** (சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
சிவகுமார் - சுஜாதா
அன்னக்கிளி

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-80, 9-80
எம். ஜி. ஆர்.
அரசகட்டளை

**REGAL** Jaffna 3rd CROWDED WEEK
Phone: 360
Daily 4-30, 7-00 & 9-30p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
THE CASSANDRA CROSSING
All passes and Concessions Suspended

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞயிறு 4 காட்சிகள்
வீட்டு மாப்பிள்ளை
(புதிய பிரதி)

**லிடோ** (யாழ்.ந
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
தீர்க்க சுமங்கலி

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
போன்: 466 தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பேரும் புகழும்

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
கடைசி வாரம் நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - சாவித்திரி
வீரப்பா - எம். என். ராஜம் - சந்திரபாபு
நடித்த
ம கா தே வி [புத்தம் புதிய பிரதி]

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) கடைசி 2 தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—பத்மினி
நடித்த
இருமலர்கள்
(புதியபிரதி)


## இன்றைய இராசிப்பலன்

ஆவணி மாதம் 14-ந் திகதி

புதன்கிழமை

(30-8-78)

**மேடம்:-** வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும், நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும், மக்களின் பிரபல்யம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

**இடபம்:-** உறவுமுறைகளில் வெடிப்பு ஏற்படும், பண விவகாரத்தின்மூலம் பகை தோன்றலாம், தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:-** பேச்சுவார்த்தைகளில் உணர்ச்சி வசப்படாது இருக்கவும், அவசர முடிவின்மூலம் விரோதத்தைத் தேடிக்கொள்ளுவீர்கள், துதிபாடிக்கொண்டே சிலர் துரோகச் செயலில் ஈடுபடுவார்கள்.

**கடகம்:-** சொற்சிலம்பம் ஆடுவதன்மூலம் மற்றவர்களைச் சொக்க வைப்பீர்கள், குடும்பத்தில் அமைதி நிலவும் பெரியவர்களுடன் உறவுகள் பலப்படும்.

**சிங்கம்:-** இதயத்தில் எரிமலை குமுறும், உள்வீட்டிலேயே உபத்திரவங்கள் அதிகரிக்கும், குழந்தை ஒன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம், ஆணவப் போக்கினுல் மற்றவர்களுடைய வெறுப்பைச் சம்பாதிக்க நேரிடலாம்.

**கன்னி:-** புதிய சூழ்நிலை உங்களுக்குப் புத்துணர்ச்சியை அளிக்கும், பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும், குடும்ப வாழ்க்கை கற்கண்டு போல் இனிக்கும்.

**துலாம்:-** மகிழ்ச்சிதரும் செய்தியொன்று கிடைக்கக் கூடும், இதயத்தில் இன்பத்தின் ரேகைகள் படரும், தெய்வ வழிபாட்டில் அதிக நாட்டம் செலுத்துவீர்கள்.

**விருச்சிகம்:-** பூமிப்பிணக்குகளால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும், வாகனம் செலுத்துவோர் மிகவும் கவனமாக இருக்கவும், எதிலும் உணர்ச்சி வசப்படாதிருக்கவும்.

**தனுசு:-** இதயத்தில் இனிமை துள்ளும், பவைர்கள் பணிவர், பரந்த நோக்குடன் செயற்படுவதன் மூலம் பொது மக்களின் பாராட்டும் கிடைக்கும்.

**மகரம்:-** சூழ்ச்சிவலை பின்னும், அடுத்துக் கெடுப்பவர் அருகிலேயே இருப்பர், கடன்பட நேரிடலாம், மன அடக்கம் நன்று.

**கும்பம்:-** உள்ளப்படுதாவில் உவகை துள்ளும், பத்திரிகைத் துறையில் தொழில்புரிவோர் பாராட்டுதல்களைப் பெறுவர்.

**மீனம்:-** தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்திற்கு வழிகோலப்படலாம், இதன் மூலம் பதவி உயர்வும் கிடைக்கலாம், பேட்டி காண்பதற்கு ஏற்ற தினம்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## நவீன மோசடி பற்றி பொலிசார் எச்சரிக்கை!

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இலங்கை திரும்பும் தமது உறவினர்கள், பிள்ளைகள் ஆகியோரை எதிர்பார்த்திருப்போருக்கு பொலிசார் எச்சரிக்கை ஒன்றினை விடுத்துள்ளனர்.

வெளிநாட்டில் இருந்து விமானத்தில் வந்தவர்கள் கள்ளக்கடத்தல் பொருட்கள் கொண்டுவந்ததால் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் சிறிது பணம் கொடுத்தால் நிலைமையை ஒருவாறு சமாளிக்கலாம் என்றுகூறி சில மோசடிக்காரர்கள் மோசடிநடவடிக்கைகளில் ஈடுபகிறுர்கள் என்று பொலிசாருக்குப் புகார்கள் கிடைத்துள்ளனவாம்.

இவர்கள் விடயத்தில் உஷாராக இருக்குமாறு பொலிசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

(உ)

## மரநடுகையில் வட்டு. அபிவிருத்திச் சங்கம்துரிதம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைத்தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள சமூகபொருளாதார அபிவிருத்திக் சங்கம் மரநடுகையில் தீவிரம் காட்டிவருகிறது.

இதற்கான பிரசாரத்தையும் இச்சங்கம் மேற்கொண்டுள்ளது.

யாழ். குடாநாட்டுக்குப் பொருத்தமான இருபதுவகையான மரங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

பொதுமக்களை இது விஷயத்தில் ஊக்கப்படுத்த ஒரு பரிசுத் திட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவை பற்றி விரிவாக ஆராயும் பொருட்டு சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் ஒரு கருத்தரங்கும் நடைபெற்றது.

பொருளாதார முன்னேற்றத்திற்கு மரநடுகை பெரும் பயன்தருமென சங்க அமைப்பாளர்கள் நம்புவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## இன்ஸ்பெக்டர் இடமாற்றம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பெறுப்பதிகாரியாக, உப்புவெளி பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றிய இன்ஸ்பெக்டர் திரு நிகால் ஜெயசேகரா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிவரும் திரு. கே. குணரத்தினம் நுகேகொட பொலீஸ் நிலையத்திற்கு செப்டெம்பர் 1ம் திகதியில் இருந்து இடமாற்றம் செய்யப்படடுள்ளார். (க)

## செப். 3-ம் திகதி முதல்வர்கள் சந்திப்பு

சென்னை, ஆக. 29

காவிரி நீர்பிரச்னை தொடர்பாக தமிழ்நாடு, கேரள, கர்நாடக முதலமைச்சர்கள் மீண்டும் அடுத்தமாதம் 3ம் திகதி புதுடில்லியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன் இவர்கள் புதுடில்லியில் நடத்திய பேச்சுவார்த்தைகள் எதுவிதமுடிவும் எடுக்கப்படாது ஒத்திவைக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை தமிழ்நாடு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அனைத்துக்கட்சிகளின் மாநாடு ஒன்றினை சென்னையில் இதுவிஷயம் பற்றி ஆராய இன்று கூட்டவிருந்தார். (உ)

## சுற்றுப்போட்டி

[பருத்தித்துறை]

பருத்தித்துறை ஐக்கியவிளையாட்டுக்கழக உதைபந்தாட்டக் கோஷ்டி அடுத்த மாதம் முதல் இலங்கையின் பல பாகங்களிலும் போட்டியில் கலந்து கொள்வதற்காகச் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்ளலிருக்கின்றது.

இக்கோஷ்டி முதலில் கிளிநொச்சி, வவனியா, அனுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளும் (க)

## இலங்கையில் தமிழ் மக்கள்

# உரிமையோடு வாழ்கிருர்கள் என இலங்கைக்கு வெளியே பொய்ப்பிரசாரம்

## ஈழத் தமிழர் நிலைபற்றி சென்னைக் கூட்டத்தில் பேச்சு

சென்னை, ஆகஸ்ட் 29 ''இலங்கையில் தமிழர்களுக்கு சகல உரிமையும் அளிக்கப்பட்டு வசதியோடும் உரிமையோடும் அவர்கள் வாழ்கின்ருர்கள் என்று இலங்கைக்கு வெளியே உண்மைக்கு மாருகப் பிரச்சாரம்செய்யப் படுகிறது. இங்குள்ள இளைஞர்கள் தலைவர்கள் சொல்வதைக் கேட்டு அப்படியே பின்பற்றிச் செல்கின்ருர்கள். ஆனல் ஈழத் தமிழ் இளைஞர்களோ தலைவர்களைத் திசை திருப்பவிடாது நடாத்திச் செல்கின்ருர்கள்''

இவ்வாறு சென்னை மத்திய நூலக மண்டபத்தில் நடைபெற்ற ஈழத்தமிழரின் இன ஒடுக்கல் நினைவுநாளின்போது தலைமைவகித்துப் பேசுகையில் டாக்டர் இரா. இளவரசு குறிப்பிட்டார்.

தமிழக ஈழ நட்புறவுக் கழகத்தின் சார்பில் . இக் கூட்டம் ஒழுங்குசெய்யப் பட்டது. பொதுச்செயலாளர் திரு. ந. அரணமுறுவல் வரவேற்புரை கூறினர்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. அரு. கோபாலன் தமது உரையில், துண்டு நிலத்திற்காகப் போராடிக்கொண்டிருக்கும் இலங்கைத் தமிழருக்கு வங்காளதேசத்திற்கு உதவியதுபோல் தமிழ்நாடு உதவவேண்டும். நேரு பிரதமராக இருந்தபோது இந்தியத் தமிழர்களை திருப்பிஅழைக்கக்கூடாது என்று பிடிவாதமாக இருந்தார். அதன்பின் வந்தோர் மலையகத் தமிழர்களின் வாக்குரிமையையும் குடியுரிமையையும் பறித்தனர்'' என்று குறிப்பிட்டார்.

இலங்கை குடிபெயர்ந்தோர் நலஉரிமைச் சங்கத் தலைவர் மணவைத்தம்பி பேசுகையில் ''தடைச்சட்டம் வருமென்றதும் இங்குபோல் விடுதலைக் கொள்கையை கைவிட்டுவிடாமல் விடுதலைக் குரல் கொடுப்பவர்கள் இலங்கைத் தமிழர்கள். ஈழத்தவர் யாரிடமும் பிச்சை கேட்கவில்லை. உரிமைகளுக்காக போராடிக்கொண்டிருக்கிருர்கள். இலங்கையில் இருந்து இங்கு எந்தப் பத்திரிகையும் வருவதில்லை ஆனல் இங்கிருந்துஆபாசப்பத்திரிகைகள் கூட அங்கு போகின்றனவே'' என்ருர்.

உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. ஜனார்த்தனன் பேசுகையில் ''நான் . இலங்கைத் தமிழர் விஷயத்திலிருந்து ஒதுங்கி இருப்பதாக சிலர் கூறிக்கொண்டுள்ளார்கள். ஆனல் அபபடி நான் ஒதுங்கவில்லை, இங்கு இந்தி உள்ள இடத்தில் இலங்கையில் சிங்களம் இருக்கிறது என்ருர்.

நட்புறவுக்கழக துணைப் பொதுச்செயலாளர் சேலம் பாவரசு நன்றிகூறினர்.

தமிழக ஈழ நட்புறவுக்கழகம் மாதந்தோறும் கூட்டங்களை நடாத்தும் என்று கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. (உ)

## செத்தல்மிளகாயின்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இவ்வருட ஆரம்பம் முதல் விவசாயத் தொழிலாளரின் ஊதியம் 20 சதவிகிதம் அதிகரித்துள்ளது. நீர் இறைக்கும் இயந்திரத்தின் விலையும் அதன் உதிரிப்பாகங்களின் விலையும் 20 சதவிகிதத்தினல் அதிகரித்துள்ளன. சாதாரணமாகப் பாவிக்கப்படும் ரசாயனக்கலவைகளின் விலை 20 முதல் 25 வீதம் அதிகரித்துள்ளது. இந்நியி செத்தல்மிளகாயின் விலை 12 ரூபா 50 சதமாக நிர்ணயிக்கப்படவேண்டும்.

புதிய மிளகாய் சந்தைக்கு வர ஆரம்பித்துள்ளது. பாவனையாளர்களுக்குக் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் மூலம் இறக்குமதிசெய்யப்பட்ட மிளகாய் வழங்கப் பட்டுவருகிறது. மேலும் மிளகாய் இறக்குமதிசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. உள்ளூர் மிளகாய் உற்பத்தி பற்றி அறியாமல் இறக்குமதிக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

தேசியக் கொள்கை பற்றி விவசாயி தெரிந்துகொள்ள முடியாத நிலையிலிருக்கிருர். அரசின் இறக்குமதிக் கொள்கைக்கும், உற்பத்திக் கொள்கைக்குமிடையில் இணைப்பு இல்லாததுபோல் தோன்றுகிறது. விவசாயி ஒருவர், விவசாயத்திலுள்ள விருப்பத்தினல் விவசாயம் செய்கிருரென எதிர்பார்க்கமுடியாது. அதனல் வரும் லாபந்தான் விவசாயிக்கு ஆர்வம் ஏற்படுத்தும்.

### இறக்குமதி மிளகாய் 7 ரூபா 60 சதம்

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் தற்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இறக்குமதிசெய்யப்பட்ட செத்தல்மிளகாயை 7 ரூபா 60 சதத்திற்கு வழங்கி வருகிறது. உள்ளூர் உற்பத்தி சந்தைக்கு வரும்நேரத்தில் தான் இப்படியாககூ.மொ.வி. நிலையம் விற்பனை செய்கிறது. இதனல் குறைந்த விலைக்கு விற்கவேண்டிய நிலை ஏற்பட்டு உற்பத்தியாளர் பாதிக்க வேண்டிவரும். இதனல் உற்பத்தியாளர் மிளகாய்ச் செய்கையைக் கைவிடவேண்டிய நிலை ஏற்படும். அரசு முந்திய காலத்தைப்போன்று சகல தேவைகளையும் இறக்குமதி செய்யவேண்டி ஏற்படும் இது தான் அரசின் கொள்கையாக இருந்தால் அதனை தெட்டத்தெளிவாக வெளியிட வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். அப்படியென்ருல்தான் அவர்கள் விவசாயத்தினல் ஏற்படும் விளைவுகளைப்பற்றி எச்சரிக்கையாக இருப்பார்கள்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் எல்லா உப உணவுப் பொருட்களுக்கும் இந்த நிலைமை பொருந்தும்.

விவசாயிகள் மத்தியில்உள்ள அதிருப்தியை நீக்குவதற்காக கூட்டுறவு மொத்த ஸ்தாபன விற்பனை இல்ாகா, கூட்டுறவு சந்தைப்படுத்தும் திணைக்களம் ஆகியவை தற்போதுள்ள உற்பத்தி நிலைக்கு அமைவாக நிர்ணயிக்கப்படும் விலைக்கு மிளகாயைக் கொள்முதல்செய்ய வேண்டும். மிளகாயின் விலை பற்றி அரசு உறுதியளிக்கப் படுவது இன்றைய நிலைக்கு ஏற்றதாக இருக்கும்.

விவசாயிகளை வர்த்தகர்களின் கருணையில் இருக்கும் நிலைக்குத் தள்ளக்கூடாது. அரசு இவ்விஷயத்தில் தலையிடாவிட்டால் வர்த்தகர்கள் விவசாயிகளை முழு அளவில் சுரண்டிவிடுவார்கள். (க)

# சூலமங்கலம் சகோதரிகள் இணுவிலில் இன்றுகச்சேரி



(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய பிரபல சங்கீத மேதைகளும், மெல்லிசைப் பாடகர்களுமாகிய சூலமங்கலம் சகோதரிகள் இன்று பகல் விமானம் மூலம் இலங்கை வருகிருர்கள். இவர்கள், இன்று இரவு இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோவில் இராஜகோபுர 7வது ஆண்டுத் திருவிழாவில் இன்னிசை விருந்தளிப்பார்கள்.

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சூலமங்கலம் சகோதரிகள் ''கீதாமிர்தக் கிரவுஞ்சம்' என்னும் பட்டமளித்துக் கௌரவிக்கப்படுவார்கள். பிரம்மஸ்ரீ வீரமணி ஐயரினல் இயற்றப்பட்ட வாழ்த்துப்பாவும் வழங்கப்படும்.

கச்சேரி நடைபெறுவதையொட்டி, இ. போ. சபை யாழ். டிப்போ, யாழ். குடாநாட்டின் சகல பாகங்களுக்கும் விசேஷ பஸ் சேவைகளை ஒழுங்குசெய்துள்ளது.

சூலமங்கலம் சகோதரிகள் இம்மாதம் 31ந் திகதி வரை இலங்கையில் தங்குவார்கள். இவர்கள் இலங்கை வருவது இதுவே முதல் தடவையாகும்.

பின்னணிப்பாடகர்களாகவும் திறமைபெற்ற சூலமங்கலம் சகோதரிகள் பாடிய கந்த சஷ்டிக் கவசம் முருகன் அடியார்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சூலமங்கலம் சகோதரிகளின் கச்சேரியை ஒலிப்பதிவுசெய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது. (கெ-இ)

## நூல்அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

'காலநதி' சிறுகதைத் தொகுப்பு நூல் அறிமுகவிழா இன்று பிற்பகல் 4 மணியளவில் யாழ். வளாக இராமநாதன் மண்டபத்தில் வளாகத் தமிழ் இலக்கிய மன்றத் தலைவர் செல்வி மாலினி கந்தசாமி தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன், யாழ். வளாகத் துணை விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணியம், திரு. க.சொக்கலிங்கம் (சொக்கன்), திரு. க, சிதம்பரநாதன், திரு ஓங்காரமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றுவர். திரு. கணபதிகணேசன் நன்றி தெரிவித்துப் பேசுவார். (ஊ-அ)

## தீண்டாமை...

(1ம் பகக்த் தொடர்ச்சி)
யைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும்'

யாழ் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணுன்டோ மகாநாட்டுக்குத்தலைமைவகித்து உரையாற்றுகையில் கூறியதாவது:

மக்களிடையே ஏற்றத் தாழ்வுகள் ஒருபோதும் இருக்கக்கூடாது. அதை நாம் நல்லெண்ணத்துடன் தீர்த்து வைக்கவேண்டும். அப்போது தான் நாட்டின் அபிவிருத்தி நல்லமுறையில் நடைபெறும்.

யாழ். மாவட்ட எம். பி.க்களின் வேண்டுகோளின்படி இம்மாநாடு கூட்டப்பட்டுள்ளது. தீண்டாமையை யாழ். மாவட்டத்தில் காந்தி பிறந்தினமான அக்டோபர் 2-ந் திகதிக்கு முன்னர் அழிக்க அதிகாரிகள் செயல்படவேண்டும் என எம். பி. க்கள் கோரியுள்ளனர்.

### அரசாங்க அதிபர் கோரிக்கை

உதவி அரசாங்க அதிபர்கள் தமது பகுதிகளில் தீண்டாமை ஒழிப்புச் சம்பந்தமான குறைபாடுகள் குறித்து அறிக்கை தயாரித்து அடுத்தமாதம் 10ம் திகதிக்கு முன் இங்கு நியமிக்கப்பட்டுள்ள உபகுழுவுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வறிக்கையின் மூலம் குறைபாடுகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க முடியும்.

மகாநாட்டுக்கு யாழ். மாவட்ட எம். பி. க்கள், உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஏ. ஈ. ஆனந்தராஜா, சகல திணைக்கள அதிகாரிகள், யாழ்.மாவட்ட உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம், தீண்டாமை ஒழிப்புக்கு தடையாக உள்ள காரணங்களை எடுத்து விளக்கினர்.

மாநாட்டில் பல உதவி அரசாங்க அதிபர்களும் தமது கருத்துக்களை எடுத்து விளக்கினர். புதிய உப குழு தனது முதலாவது ஆலோசனையை நேற்று ஆராய்ந்தது. (கெ)

# தெல்லி. துர்க்காதேவி சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காதேவி கோவில் உற்சவம் எதிர்வரும் 3ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது. 13ந் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், அடுத்த நாள் தீர்த்தமும் நடைபெறும்.

அடுத்த மாதம் 4ந் திகதி திங்கட்கிழமை அம்பாளின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா நடைபெறும்.

அன்று ஸ்தபதி கலாகேசரி ஆ. தம்பித்துரைக்குப் பொன்னுடை போர்த்திப் பொற்கிழி வழங்கப்படுவதுடன், குரும்பசிட்டி கலாகேசரி கலாலயச்சிற்பச்செல்வர்கள் கௌரவிக்கப்படுவார்கள். துர்க்கை அம்பாளுக்குக் கடந்த 50 ஆண்டுகளாகப் பூசைசெய்து வந்த சிவஸ்ரீ ஞா.குமாரசாமிக் குருக்களும், நாதஸ்வரக்கலாநிதி திரு. என். கே. பத்மநாதனும் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்படுவர்.

சித்திரத்தேர் வெள்ளோட்டத்தையொட்டிச் சிறப்புமலரும் வெளியிடப்படும். துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மலரை வெளியிட்டுவைப்பார். மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கல்லூரி முன்னள் விரிவுரையாளர் பண்டிதை திருமதி கங்கேஸ்வரி கந்தையா வாழ்த்துரை வழங்குவார்.

அன்னதானமும் இடம் பெறும்.

## ஜே.ஆர்.

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

நேற்று சன்சோனிக் கமிஷன் முன்னிலையில் கூறினர்.

தமிழ்அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. அண்டலூட் சாட்சியைத் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்தார். (ம)

## சட்டமா அதிபர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
மக்கி ரத்வத்தைக்கு எதிராகச் சுமத்தப்பட்ட லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பதிவேடுகளையும் திரு பீவிக்ஸ் எடுத்துப் பார்வையிட்டார்.

நீதியரசர்கள் ஜெயபத்திரான, ரி. டபிள்யு. ராஜரத்தினம், ரி. விஜயசுந்தர ஆகியோரும் ஒருமுறை நீதிமன்றத்திலிருந்த பதிவேடுகளை எடுத்துப் பார்வையிட்டனர்.

### தீர்ப்பு ரத்து

உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. ஜயபத்திரான தமது நீதிமன்றப் பிரத்தியேக அறையில் சத்தித்த வழக்கறிஞர் ஒருவரின் கோரிக்கையின் பேரில் 'டைம்ஸ் ஒப் சிலோன்' நிறுவனத்தின் இயக்குநர்களுக்கு எதிராக மாவட்ட நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ரத்துச் செய்து அவர்களுக்கு மீண்டும் பதவி பெற்றுக்கொடுத்தார் என்றும் திரு. ஹேரத் கூறினர், (ம-இ)

இப்பத்திரிகை [illegible] ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் [illegible] 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30-ந் திகதி அச்சி[illegible]
The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone 389 - Registered as a Newspaper in SriLanka